DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67 /2018

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Pandiammal | Father/Husband Name : Thennarasu | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.04.2021. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 2021.

முதல் விசாரணை:

நான் வடக்குநாவினிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மதிய நேரத்தில் நான் கண்மாயிலிருந்து வரும்பொழுது 2 பெண் போலீசார் வந்து என்னிடம் எனது பெயரை கேட்டார்கள். போலீசாருக்கும் ஆஜர் எதிரி பாலாவிற்கும் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். (சாட்சியை பிறழ்சாட்சியாக அரசுதரப்பில் மாறுதல் செய்யக்கேட்டு அனுமதிக்கப்படுகிறது.)

குறுக்கு விசாரணை: அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 06.02.18ம் தேதி மதியம் 1 மணிக்கு 2 பெண் காவலர்கள் எங்கள் ஊரைச்சேர்ந்த முத்தன் மகன் பாஸ்கர் என்பவரைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடம் பாஸ்கர் மகன் எதிரி பாலா என்ற பாலசுந்தர் என்பவர் வந்து அசிங்கமாக பேசி அவர்களை ஒழுங்காக ஓடிடுங்க இல்லாவிட்டால் இங்கேயே கொன்றுபோட்டுவிடுவேன் என்று மிரட்டி பெண் காவலர்கள் வந்திருந்த இருசக்கர வாகனத்தை எடுக்கவிடாமல் பெண் காவலர்களை நகரவிடாமலும் அந்த வாகனத்தை அவர்கள்மீது தள்ளிவிட்டான் என்றும் அதை நானும் அருகிலிருந்தவர்களும் பார்த்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி மிரட்டியதால் எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67 /2018

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Gunaseela | Father/Husband Name : Kumar | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.04.2021. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 2021.

முதல் விசாரணை:

நான் வடக்குநாவினிப்பட்டியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். சுமார் 2 அல்லது 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மதிய நேரத்தில் நான் என் வீட்டிலிருந்தபோது 2 பெண் போலீசார் வந்திருந்தார்கள். சத்தம்கேட்டு நாங்கள் போய் பார்த்தோம். அப்போது பெண் போலீசாருக்கும் ஆஜர் எதிரி பாலாவிற்கும் வாக்குவாதம் நடந்தது. எதிரி மது அருந்தியிருந்தார். சொல்லமுடியாத அசிங்கமான வார்த்தைகளால் எதிரி போலீசாரை பேசினார். மேலும் எனக்கு நிறையபேரை தெரியும். உங்களைவிட பெரிய ஆட்களையெல்லாம் தெரியும் என்று போலீசாரை மிரட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே ஒரு பிரச்சனை ஏற்பட்டு அதில் எதிரி என்மீது புகார் கொடுத்து என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளத என்றால் சரிதான். அதனை மனதில் வைத்துக்கொண்டு இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று பெண் போலீசார் அங்கு வரவில்லை என்றாலும், நான் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் அன்றையதினமே என்னை விசாரித்தனரா என்றால் அன்று விசாரித்தது மட்டும்தான். என் போலீசார் விசாரணையில் இருசக்கர வாகனத்தை எதிரி போலீசார் மீது தள்ளிவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் அதை நான் சொல்லவில்லை, நான் பார்க்கவும் இல்லை, ஆனால் போலீசார் பிங்க் கலர் ஸ்கூட்டியில் வந்திருந்தார்கள்.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67 /2018

Deposition of witness for: PW - 5

Name : Sivarani Father/Husband Name : Saravanakumar

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 19.04.2021.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது கல்லம்பட்டியி வசிக்கிறேன். சம்பவதின்போது வடக்குநாவினிப்பட்டியில் வசித்தேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மதியம் 1 மணியளவில் நான் என் வீட்டிலிருந்தபோது 2 பெண் போலீசார் வந்திருந்தார்கள். எதிரி பாலா என்ற பாலசுந்தர் என்பவரை தெரியும். நான் எங்கள் வீட்டிலிருந்து காட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோது எதிரிக்கும் போலீசாருக்குமிடையே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தது, நான் சிறிதுநேரம் நின்று பார்த்தேன். எதிரி போலீசாரை நீங்களய் என்ன பெரிய ஆளா என்று கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது குழந்தை அழுததால் நான் விட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

பெண் காவலர்கள் அங்கு வரவில்லை என்றாலும், நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 பெண் போலீசார் வந்திருந்தார்கள் நான் பார்த்தேன். போலீசார் எதில் வந்திருந்தார்கள் என்றால் ஸ்கூட்டியில் வந்திருந்தனர், அதன் நிறம் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் ரோஸ்கலர் என்று நினைக்கிறேன் என்று கூறுகிறார். போலீசார் என்னை என்று விசாரித்தனர் என்றால் அன்றையதினமே விசாரித்தனர். நான் முதல் விசாரணையில் சொன்ன விசயங்களை தவிர வேறு எதுவும் போலீசாரிடம் சொன்னேனா என்றால் போலீசாரிடம் நான் என் பெயர் விவரத்தை மட்டும்தான் சொன்னேன்.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67 /2018

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Bruntha | Father/Husband Name : Veeran | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.04.2021. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 2021.

முதல் விசாரணை:

நான் வடக்குநாவினிப்பட்டியில் வசித்தேன். சிவலியராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி பாலா என்ற பாலசுந்தர் தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மதிய நேரத்தில் எதிரியின் அப்பாவை தேடி 2 பெண் போலீசார் வந்திருந்ததாகவும், விசாரிக்க வந்த பெண் போலிசாரை எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், போலீசாரின் இருசக்கர வாகனத்தை தள்ளிவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை:

இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67 /2018

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Pillammal | Father/Husband Name : Amulraj | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.04.2021. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 2021.

முதல் விசாரணை:

நான் வடக்குநாவினிப்பட்டியில் வசித்தேன். கூலிவேலை செய்கிறேன். ஆஜர் எதிரி பாலா என்ற பாலசுந்தர் தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மதிய 1 மணியளவில் 2 பெண் போலீசார் வந்திருந்ததாகவும், அவர்களுக்கும் எதிரி பாலாவிற்கும் சண்டை நடந்ததாகவும் கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக அரசுதரப்பில் மாறுதல் செய்யக்கேட்டு அனுமதிக்கப்படுகிறது.)

குறுக்கு விசாரணை: அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 06.02.18ம் தேதி மதியம் 1 மணிக்கு 2 பெண் காவலர்கள் எங்கள் ஊரைச்சேர்ந்த முத்தன் மகன் பாஸ்கர் என்பவரைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடம் பாஸ்கர் மகன் எதிரி பாலா என்ற பாலசுந்தர் என்பவர் வந்து அசிங்கமாக பேசி அவர்களை ஒழுங்காக ஓடிடுங்க இல்லாவிட்டால் இங்கேயே கொன்றுபோட்டுவிடுவேன் என்று மிரட்டி பெண் காவலர்கள் வந்திருந்த இருசக்கர வாகனத்தை எடுக்கவிடாமல் பெண் காவலர்களை நகரவிடாமலும் அந்த வாகனத்தை அவர்கள்மீது தள்ளிவிட்டான் என்றும் அதை நானும் அருகிலிருந்தவர்களும் பார்த்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி மிரட்டியதால் எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67 /2018

Deposition of witness for: PW - 8

Name : Indira Father/Husband Name : Malaichamy

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 19.04.2021.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 2021.

முதல் விசாரணை:

நான் வடக்குநாவினிப்பட்டியில் வசிக்கிறேன். கடை நடத்திவருகிறேன். ஆஜர் எதிரி பாலா என்ற பாலசுந்தர் தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் 1 மணியளவில் 2 பெண் போலீசார் வந்திருந்ததாகவும், அவர்களுக்கும் எதிரி பாலாவும் பேசிக்கொண்டிருந்தார்கள், அப்போது நான் இயற்கை உபாதையை கழிப்பதற்காக காட்டிற்கு சென்றுகொண்டிருந்தேன். அவர்கள் என்ன பேசினார்கள் என்று நான் கவனிக்கவில்லை. நான் காட்டிலிருந்து திரும்பி வரும்போதும் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் கவனிக்காமல் வந்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக அரசுதரப்பில் மாறுதல் செய்யக்கேட்டு அனுமதிக்கப்படுகிறது.)

குறுக்கு விசாரணை: அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 06.02.18ம் தேதி மதியம் 1 மணிக்கு 2 பெண் காவலர்கள் எங்கள் ஊரைச்சேர்ந்த முத்தன் மகன் பாஸ்கர் என்பவரைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடம் பாஸ்கர் மகன் எதிரி பாலா என்ற பாலசுந்தர் என்பவர் வந்து அசிங்கமாக பேசி அவர்களை ஒழுங்காக ஓடிடுங்க இல்லாவிட்டால் இங்கேயே கொன்றுபோட்டுவிடுவேன் என்று மிரட்டி பெண் காவலர்கள் வந்திருந்த இருசக்கர வாகனத்தை எடுக்கவிடாமல் பெண் காவலர்களை நகரவிடாமலும் அந்த வாகனத்தை அவர்கள்மீது தள்ளிவிட்டான் என்றும் அதை நானும் அருகிலிருந்தவர்களும் பார்த்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி மிரட்டியதால் எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.